https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

01st JANUARY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 60




மலர்ந்துள்ள புத்தாண்டு
அனைவருக்கும்
மகிழ்ச்சியாக அமைய
"புதுச் சுடர்" இன் வாழ்த்துக்கள்!




# ஜனாதிபதி தேர்தலில் தமிழ் டயஸ்போரா

தமிழ் டயஸ்போராவின் ஆதரவு பெற்ற ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கு லைக்கா மொபைல் நிறுவனத்தின் தலைவரும் திரைப்பட தயாரிப்பாளருமான தொழிலதிபர் சுபாஷ் கரண் அலி ராஜா நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சுபாஷ்கரன் இலங்கை அரசியலில் குதிப்பதற்கான முதல்கட்ட நடவடிக்கையாக இந்த செயற்பாடு அமையப்போகிறது என்று தெரிய

02



## சிறுபான்மை இன கட்சிகளுடன் தம்மிக்க பேச்சு

மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கப்படவுள்ள தொழிலதிபர் தம்மிக்க பெரேரா சிறுபான்மை இன மக்களின் வாக்குகளை குறி வைத்து சிறுபான்மை இன கட்சிகளுடன் இப்போதே பேச்சில் ஈடுபட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

சிறுபான்மை இன மக்களின் வாக்குகள் ஜனாதிபதி தேர்தலில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நம்புவதால் தம்மிக்க இப்போது சிறுபான்மை இன மக்களின் பக்கம் கவனத்தை செலுத்தியுள்ளார்

02

## பொலிஸ்-சிறை அதிகாரிகளுக்கு பாதாள குழுக்கள் சம்பளம்

பாதாள உலக குழுக்களுக்கு பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு உதவிகளை வழங்கி வரும் பொலிஸ்-சிறை அதிகாரிகள்,ஏனைய நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் உள்ளிட்ட சுமார் 2 ஆயிரம் பேர் தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

இவர்களுள் அதிகமானவர்களுக்கு பாதாள குழுக்கள் சம்பளம் வழங்கி வருவதாக புலனாய்வு அறிக்கை தெரிவிக்கிறது.அந்த அறிக்கை அரசிடம்

02

## கிழக்கின் அபிவிருத்திக்கு 48 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு: ஆவணத்தில் கையொப்பமிட்டார் ஆளுநர்



2024ஆம் ஆண்டில் கிழக்கு மாகாண வளர்ச்சி, மேம்பாடு மற்றும் அபிவிருத்திகளுக்காக மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் 48ஆயிரத்து 223 மில்லியன் (48,223,000,000.00) ரூபா ஒதுக்கீட்டிற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆவணத்தில் ஆளுநர் இன்று கையொப்பமிட்டார்.

02

## ஒக்டோபர் 16ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தல்

அரசியலமைப்பின் பிரகாரம், 2024ஆம் ஆண்டு ஒக்டோபர் 16ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும்

02

## மலையக அரசியல் களத்தில் குதிக்கும் சுபாஷ்கரன்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் புலம்பெயர் தமிழ் மக்களின் ஆதரவுடன் தமிழ் வேட்பாளரை களமிறக்க சர்வதேச வர்த்தகரான சுபாஷ்கரன் அல்லிராஜா செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட சர்வதேச வர்த்தகரும், லைக்கா

02

அமானா வங்கியில்
வாகன நிதியுதவி



உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த
தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

புதுசுடர்
www.puthusudar.lk
2024 JANUARY 01 - SUNDAY

# அதிஷ்டமில்லாத 2024

இந்த நாட்டின் பொருளாதாரம் யாரும் எதிர்பார்த்திராதவகையில் அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கிறது.

மக்கள் நினைத்துப் பார்க்க முடியாதவாறு துன்பத்தில் வீழ்ந்துள்ளனர்.

இந்த நிலைமைக்கு யார் காரணம் என்று எல்லோரும் அறிவார்கள்.

ராஜபக்ச குடும்பமே அன்றி வேறில்லை நீதிமன்றமும் அதை இப்போது உறுதிப்படுத்தியுள்ளது. மஹிந்த ராஜபக்ச- பசில் ராஜபக்ச- கோத்தாபய ராஜபக்ச ஆகிய மூவரேஇதற்கு காரணம் என்கிறது உயர் நீதிமன்றம்.

நீதிமன்றம் அறிவித்தாலும் அறிவிக்காவிட்டாலும் அவர்கள்தான் காரணம் என்பதை மக்கள் அறிவர் அதன் காரணமாகவே கோத்தாவுக்கு எதிராக மஹிந்தவுக்கு எதிராகப் போராட்டம் நடத்தி அவர்களை பதவியில் இருந்து கவிழ்த்தனர்.

இப்போது நீதிமன்றம் அவர்கள்தான் காரணம் என்று அறிவித்துவிட்டதால் அந்த உண்மை சட்டரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இவர்கள் செய்த குற்றம் இலகுவானது அல்ல. முழு நாட்டையும் சிக்கலில்-வறுமையில் தள்ளியுள்ளது.

அதற்காக மக்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பைக் கொடுததபோதிலும்,அந்தத் தீர்ப்பால் உண்மையில் மக்களின் பிரச்சினை தீரவில்லை.

ஜனாதிபதியாகவிருந்த கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டப்பட்டார். மஹிந்த பிரதமர் பதவியில் இருந்து விரட்டப்பட்டார்.அவ்வளவுதான்.

இவர்கள் தண்டிக்கப்படவுமில்லை மக்களின் பிரச்சினைகள் தீரவுமில்லை.

கோத்தாவின் இடத்துக்கு ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக வந்தார் அப்போதிருந்த பிரச்சினையான எரிபொருள் தட்டுப்பாட்டுக்கும் மின் வெட்டுக்கும் தீர்வை வழங்கினார்.

ஆனால்,பொருட்களின் விலைகள் குறையவே இல்லை.இப்போது பார்த்தால் பல பொருட்களின் விலைகள் கோத்தாவின் ஆட்சியில் இருந்ததை விடவும் அதிகமாகவே உள்ளன.

மின் கட்டணம் தாறுமாறாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

மின் கட்டணத்தைச் செலுத்த முடியாமல் 5 லட்சம் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. மின் கட்டணம் 3 ஆயிரம் ரூபாவைத் தாண்டினால் மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது.

மக்கள் துன்பத்துக்கு மேல் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.சர்வதேச நாணய நிதியத்திடம் கடனைப் பெறுவதற்காக அது விதித்த நிபந்தனைகள் அனைத்தையும் அதிகரிக்கப் போய்த்தான் மக்கள் இவ்வளவு சிக்கலுக்குள் வீழ்ந்துள்ளனர்.

இந்த வருடமாவது மக்களுக்கு விடிவு கிடைக்குமா என்று பார்த்தால் இப்போது இருப்பதைவிட மிக மோசமாகத்தான் அமையப் போகிறது நிலைமை.

2024 ஜனவரியில் இருந்து இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருத்தரும் மேலதிகமாக 30ஆயிரம் ரூபாவை வாரியாகச் செலுத்தவுள்ளனர்.

இதைச் சமாளிப்பதென்றால் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் 10 ஆயிரம் ரூபா அதிகரிக்கப்பட்டு அது ஏப்ரல் மாதத்தில் இருந்துதான் வழங்கப்படும்.

இது மக்களை ஏமாற்றும் செயல். அரச ஊழியர்களோ 20 ஆயிரம் ரூபா அதிகரிப்பை கோருகிறார்கள்.

துறைமுக ஊழியர்கள் அடுத்த 3 வருடங்களுக்கு 36 வீத சம்பள அதிகரிப்பைக் கோருகிறார்கள்.

ஆனால், இவை எவையும் நடக்கப்போவதில்லை என்பதை எல்லோரும் அறிவோம்.அதற்காகப் போராட்டங்கள் நடத்தியும் வேலை இல்லை.

பொருட்களின் விலைகள் நாளுக்கு நாள் உயருகின்றன.முதலாளிமார் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வேண்டுமென்றே பொருட்களின் விலைகளை உயர்த்துவது ஒரு பக்கம் அரசின் இயலாமையால் விலைகள் உயர்வது இன்னொரு பக்கம். எல்லாமே இறுதியில் மக்களின் கழுத்தைத்தான் நெருக்குகின்றன.

மக்கள் வாழ வேண்டும் என்பதை விட அரசு வாழ வேண்டும் என்பதுதான் இந்த ஆட்சியாளர்களுக்கு முக்கியமாகத் தெரிகிறது.

அரசின் அனைத்து நடவடிக்கைகளும் அரசைக் காப்பாற்றுவதாகவே உள்ளது. மக்களைக் காப்பாற்றுவதாக இல்லை. மின் கட்டண அதிகரிப்பு என்பது மக்களை எந்தளவு நெருக்குகிறது என்பதை நாம் அறிவோம்.

ஆனால்,அதைப்பற்றியெல்லாம் கணக்கில் எடுக்காது அரசு நட்டமடையாதவாறே நடவடிக்கை எடுத்து வருகிறது.

மக்களுக்கு எதுவித நிவாரணமும் இல்லை.அரசு மட்டும் நஷ்டத்தில் இயங்கக்கூடாது. இதுதான் அரசின் நிலைப்பாடு. மேலும் இப்போது மக்கள்மீது சுமத்தப்பட்டுள்ள வரிகளும் அடுத்த வருடம் அதிகரிக்கப்படவுள்ள வரிகளும் மக்களை இறுக்கி அரசைப் பாதுகாக்கும் திட்டம்தான்.

இந்த நிலை இப்படியே இன்னும் சில காலம் தொடர்ந்தால் இலங்கை சோமாலியாவைவிட மோசமானதாக அமையும்.வறுமை மேலும் அதிகரிக்கும். பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடையும்.

தொழில் வாய்ப்புகள் மேலும் இழக்கப்படும். சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் தவணை நிதியைப் பெறுவதற்காக நிதியத்தின் அடுத்த நிபந்தனைகளுக்கு உடன்பட்டே ஆக வேண்டும் என்கிறது அரசு.

முதலாம் தவணை நிதியைப் பெறுவதற்காக நிதியம் விதித்த நிபந்தனைகளை நடைமுறைப்படுத்தப் போய்த்தான் இவ்வளவு சிக்கல் மக்களுக்கு.

மேலும் நிபந்தனைகளை நிறைவேற்றப் போனால் நிலைமை மேலும் மோசமாகும்.

நாணய நிதியத்தைத் தவிர்த்து வேறு வழிகளில் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க இவர்களுக்குத் தெரியவில்லை.

அப்படி நாணய நிதியத்திடம் சென்று பொருளாதார பிரச்சினை தீர்ந்தால் பரவாயில்லை.மேலும் பிரச்சினையல்லவா கூடுகிறது.

நாணய நிதியத்தால் அரசின் பிரச்சினைதான் தீருகிறது.மக்களின் பிரச்சினை கூடுகிறது.

இந்தப் பிரச்சினைகள் அனைத்துக்கும் காரணம் அந்த ராஜபக்ஸ சகோதரர்கள்தான்.இவர்களுக்கு என்ன தண்டனை? யார் தண்டனை கொடுப்பது?

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வருகிறது.

அதற்காக இவர் மலையகத்தை அடிப்படையாகக் கொண்ட அருநலு மக்கள் முன்னணி என்றொரு கட்சியை வாங்கி இருக்கிறார்.அதன் தவிசாராகவும் பொது செயலாளராகவும் டாக்டர் ஏ.ஆர்.கிரிசான் என்பவர் இருக்கிறார்.

இந்தக் கட்சியின் ஊடாக எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வடக்கு-கிழக்கில் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு அவர் திட்டமிட்டுள்ளார் என்று உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு ஏற்ப விரைவில் விரிவான ஊடக பிரசாரம் ஒன்றைத் தொடங்கவுள்ளார் என்றும் தெரிய வருகிறது.

## மலையக...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

மொபைலின் உரிமையாளருமான சுபாஷ்கரன் அலிராஜா, இலங்கையில் அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க அரசியல் கட்சி ஒன்றின் உரிமையையும் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவர் பொறுப்பேற்றுள்ள அரசியல் கட்சி "அருணலு மக்கள் கூட்டணி" (Arunalu People's Alliance) என்ற பெருந்தோட்ட அரசியல் கட்சியாகும். அதன் தலைவர் மற்றும் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். கிருஷான் என்றும் கூறப்படுகிறது.

புலம்பெயர் தமிழ் மக்களுடன் நெருக்கமாக அரசியல் செய்துவரும் சுபாஷ்கரன் அல்லிராஜா, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொருத்தமான ஜனாதிபதி வேட்பாளரை முன்வைக்கும் நோக்கில் இந்தக் கட்சியைக் கையகப்படுத்தியுள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதற்காக, அடுத்த மாதம் முதல் பரந்துபட்ட ஊடக நடவடிக்கையை மேற்கொள்ளவும் அவர் திட்டமிட்டுள்ளதாக அறியமுடிகிறது.

## கிழக்கின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை, புத்தாண்டை முன்னிட்டு முதல் கட்டமாக இன்று 101 நலத்திட்டங்களையும் ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆரம்பித்து வைத்தார்.

முதலமைச்சரின் அமைச்சு மற்றும் உள்ளூராட்சி மன்றம், கிராமிய அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில், விவசாயம் மற்றும் கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், போக்குவரத்து ஆணையம்,சுற்றுலா பணியகம், கட்டிடத் துறை வீட்டுவசதி ஆணையம்,மாகாண திட்டமிடல் செயலகம், கூட்டுறவு அபிவிருத்தி மீன்பிடி அமைச்சு,கல்வி மற்றும் கலாச்சார, முன்பள்ளி கல்வி பணியகம்,விளையாட்டு அமைச்சு, சுகாதார மற்றும் சுதேச மருத்துவத் துறை, சிறுவர் நன்னடத்தை மற்றும் சமூக சேவைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி மற்றும் காணி அமைச்சுகளுக்காக இந்த 101 நலத்திட்டங்கள் ஆளுநரால் ஆரம்பித்து வைக்கப்பட்டது .

## ஒக்டோபர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

என தெரிவித்துள்ள தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க, நாளை முதல் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகள் ஆரம்பமாகவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் அடிப்படையில் ஒக்டோபர் 16ஆம் திகதி புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டியுள்ளது.

அதற்கான பிரதான பணிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக தற்போது, முன் ஆயத்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அந்த வகையில், 2024ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகள் ஜனவரி முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளது.

## பொலிஸ்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாதாள குழுக்கள் கைது செய்யப்பட்டபோது அவர்களை விடுவிப்பதற்காக பல அரசியல்வாதிகள் தலையிட்ட 30 சம்பவங்கள் அந்த அறிக்கையில் பதிவாகியுள்ளன.

சில அரசியல்வாதிகளின் உறவினர்கள் பாதாள குழுக்களாக உள்ளனர் என்றும் அவர்களுக்கு இந்த அரசியல்வாதிகளின் உதவி கிடைக்கிறது என்றும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுமார் 200 பாதாள குழு உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்றுள்ளனர்.அவர்கள் தப்பிச்செல்வதற்கு பல பொலிஸார் உதவியுள்ளனர் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

இவர்களின் உதவியை நிறுத்தும்வரை பாதாள குழுக்களை ஒழிப்பது சிரமம் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சேப்வே ட்ரவல்ஸ்
டிசம்பரில் உம்றா
Departure on
18th Dec.2023
10 Days PK

எமது உம்றா குழு அல்ஹாஜ் மவ்லவி தல்ஹா (பாரி) அவர்களின் நேரடி வழிகாட்டலில் அழைத்துச்செல்லப்படும்.
மதீனாவில் 50 மீட்டர் தூரத்தில் 3 நாட்களும், மக்காவில் 200 மீட்டர் தூரத்தில் 6 நாட்களும் தங்கி அமல் செய்யும் அரிய வாய்ப்பு.
அனுபவமுள்ள உலமாவின் நேரடி வழிகாட்டல் மற்றும் சியாரா உட்பட அனைத்தும் முதற்தரம்.
நியாய கட்டணம், நேர்த்தியான சேவை
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அழையுங்கள்:
Alhaj M.R.M. Farook J.P.
0777660637
SAFEWAY TRAVELS & TOURS (PVT) LTD.
IATA
#191/20, High Level Road,Siebel Garden Kirulapone, Colombo -06

# Amazon College கல்வி நிறுவனத்தின் பட்டமளிப்பு விழா

Amazon College கல்வி நிறுவனம் Amazon Campus ஆக கல்வி ராஜாங்க அமைச்சரினால் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

Amazon college ஆனது 3ஆம் நிலை தொழிற்கல்வி ஆனைகுழுவினால் பதியப்பட்ட ஒரு நிறுவனமாக காணப்படுகின்றது அதன் பதிவிலக்கமானது P01/0854 ஆகும்.

கொழும்பு 4 இல் அமைந்துள்ள Amazon College உயர்கல்வி நிறுவனம் கடந்த 18 டிசம்பர் 2023 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வருடாந்த பட்டமளிப்பு விழாவில் Amazon Campus ஆக கல்வி ராஜாங்க அமைச்சரினால் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் 120 Diploma மாணவர்கள் 50 HND மாணவர்கள் 150 பட்டதாரி மாணவர்கள் மற்றும் முதுமாணி மாணவர்கள் விருதுகளை பெற்றனர்.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக மதிப்பிற்குரிய கல்வி ராஜாங்க அமைச்சர் திரு அரவிந்தகுமார் அவர்களும் பிரதி மாலைதீவுகள் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் இலங்கை உயரஸ்தானியர்களும் விசேட அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களில் இருந்தும் சுமார் ஐந்து பேராசிரியர்கள் மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி வைப்பதற்காக வருகை தந்தனர்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணையத்தின் தலைவர் திரு சானக உதயக்குமார அமரசிங்க அவர்களும் விசேட சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார்.

கல்லூரியின் 35 விரிவுரையாளர்கள் 20 ஊழியர்களும் இணைந்து நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர். சிறந்த விரிவுரையாளர்களுக்கான விருதுகளும் சிறந்த இணை நிறுவனத்திற்கான விருதுகளும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டது.

ஏங்களுடைய இனை ருளைநசளவைல ஆக இருக்கின்ற அனைத்து ருளைநசளவைல யும் ருஊபு அங்கிகரிக்கப்பட்ட ருளைநசளவைல சர்வதேச ரீதியிலும் அங்கிகரிக்கப்பட்ட ருளைநசளவைல ஆக காணப்படுகின்றது.

ஆகவே எங்களிடம் கற்று தேர்ச்சி பெற்று சான்றிதள்கள் பெருகின்ற மாணவர்கள் எந்த நாட்டுக்கும் உயர்கல்விக்கவோ தொழிலுக்கவோ விண்னப்பிக்கின்ற வாய்ப்புகளும் சுமார் 250 மாணவர்கள் இது வரையில் UK, Australia, Canada மற்றும் Europe ஆகிய நாடுகளுக்கு சென்று உயர் கல்வியினை பயின்று வருகின்றார்கள்.

உயர் கல்வியினையும் தொழில் வாய்பினையும் பெற்றுள்ளார்கள். மேலதிக விபரங்களுக்கு எங்களுடைய Facebook பக்கதினை நீங்கள் தொடர்பு கொள்வதன் மூலம் இவற்றை நீங்கள் பாத்துக்கொள்ள முடியும்.

அதே போன்று Diploma ல் இருந்து ஆரம்பித்து அந்த மாணவர்களை HND நிறைவு செய்த பின்னர் தொடரந்து 1 வருடத்திலே Degree யினை நிறைவு செய்யகூடிய ஒரு வாய்ப்பு எமது Campus ல் காணப்படுகின்றது.

ஆகவே Part Time மூலமாக பயிளலாம். வேளிநாட்டில் இருக்கின்றவர்கள் Part Time மூலமாக எமது கல்வியினை மேற்கோள்ள முடியும்.

மாணவர்களுக்கு கல்வி வகுப்புகள் மட்டுமிள்ளாது Extra Curricular activities and வாண்மை விருத்தி யும் நடைபெற்று வருகின்றது.Phycological Team, Counseling club, Student Council போன்ற பல்வேறுபட்ட மேலதிக வாண்மை விருத்தி விடையங்களும் எங்களிடம் காணப்படுகின்றது.

எமது விஷேட பாட நெறிகளாக எங்களிடம் விஷேடமாக வடிவகைப்பட்டு தரமான விருவுரையாளர்ள் உளடக்கி விஷேடமான பாட நெறிகளும் கொடுத்து வருகின்றோம். அதாவது phycology, Counseling, Teacher Training Program, Business Management and Marketing, English இந்த துறைகளில் குறுகிய கட்டணத்திலே எமது பாட நெறிகள் வடிவமைக்கபட்டுள்ளது என்பது குறிப்பிட தக்கது.

30 சிரேஷ்ட விருவுரையாளர்ள் கொன்டு எமது இந்த Campus நடைபெற்று வருகின்றது.

5 faculty எங்களிடம் உள்ளது இதனை எங்களுடைய Campus உடைய அனைத்து நடவடிக்கைளையும் நன்றாக வடிவமைத்து அதனை சரியாக அவதானிக்கின்ற வேலையை எங்களுடைய பணிப்பாளர் Mr.Ilham Maraikar செய்து வருகின்றார் மேலதிக விபரங்களுக்கு எங்களுடைய Website (www.amazoncollege.lk ) நாடவும்.





















# உடனே நீக்கப்பட்ட பயணத் தடை



ஊடக அமைச்சின் செயலாளர் அனுஷ பல்பிட்ட கடந்த மாதம் 26ஆம் திகதி துயுஐமுயு வேலைத்திட்டம் தொடர்பில் ஜப்பானுக்கு சென்றார்.

ஆனால், அவருக்கு விமான நிலையத்தில் தடை விதிக்கப்பட்டது.காரணம் அவருக்கு எதிராக 2015 இல் குஊஐனு யால் போடப்பட்ட வழக்கால் நீதிமன்றம் அவருக்கு பயண தடை விதித்தமைதான்..

ஆனால்,2020 இல் அவர் வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார்.ஆனால்,பயண தடை நீக்கப்படவில்லை என்று அவருக்கு தெரியாது.இப்போது விமான நிலையத்தில் வைத்துத்தான் தெரிய வந்தது.

உடனே அமைச்சர் டிரான் அலசை தொடர்புகொண்டு விடயத்தைக் கூறினார் அனுஷ. டிரான் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை காரணமாக உடனடியாக பயணத்தடை நீக்கப்பட்டது.

விமானம் புறப்படுவதற்கு சரியாக 5 நிமிடங்கள் இருக்கும்போது விமானத்தில் ஏறினார் அனுஷ.

# எந்தப் பக்கம்....?



அடுத்த வருடம் எப்படியும் தேர்தல் ஒன்று வரும்.அது ஜனாதிபதி தேர்தலாகவும் இருக்கலாம் அல்லது நாடாளுமன்றத் தேர்தலாகவும் இருக்கலாம்.

வெல்கிற பக்கம் போய்ச் சேர வேண்டும் என்பதுதான் எம்பிக்கள் அனைவரினதும் நிலைப்பாடு.அதற்கான ரகசிய பேச்சுக்கள் இந்தக் கட்சிதான் வெல்லும் என்று அவர்கள் ஊகிக்கின்ற கட்சிகளுடன் இடம்பெற்று வருகின்றன.

அந்த அடிப்படை உள்ளூராட்சி சபைத் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு 36 எம்பிக்கள் டலஸ் அழகப்பெரும தலைமையிலான கூட்டணியில் சேர்த்துக்கொண்டனர்.

அவர்கள் இப்போது இக்கட்டான நிலையில் உள்ளனர்.இந்தக் கூட்டணியிலேயே இருப்பதா அல்லது வேறு கட்சிகளுக்குப் பாய்வதா என்று யோசித்துக்கொண்டு இருக்கிறார்கள்.

அதற்கு ஏற்ப எதிர்வரும் தேர்தலில் எந்தக் கட்சி வெல்லும் என்று ஆராய்ச்சி நடத்திக்கொண்டு இருக்கிறார்கள்.

# எனக்கு நடந்ததே உங்களுக்கும்.....






சுதந்திர மக்கள் கூட்டணியின் கூட்டம் ஒன்று கடந்த வாரம் கொழும்பில் உள்ள கொமியுனிஸ்ட் கட்சி காரியாலயத்தில் கூட்டணியின் செயலாளர் திலங்க சுமதிபாலாவின் தலைமையில் இடம்பெற்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை அடிப்படையாக வைத்து கூட்டணி சேர்ந்த கட்சிகளுடன் மீண்டும் தனித்தனியாக பேச்சு நடத்துவதுபற்றி முடிவெடுக்குப்பதற்காகவே அந்தக் கூட்டம் இடம்பெற்றது.

அதற்கான பொறுப்பை நீங்கள் எடுத்து செயற்படுங்கள் என்று விமல் வீரவன்ச திலங்கவிடம் கூறினார்.

திலங்க அதை ஏற்றுக்கொண்டார்.

அப்போது தயாசிறி ஜயசேகர கூறினார்."" மைத்திரிட்ட சொல்லாம செய்யாதீங்க..பிறகு,,எனக்கு ஏற்பட்ட நிலதான் உங்களுக்கும்...""
என்றார் சிரித்துக்கொண்டு...

தயாசிரியின் சுதந்திர கட்சியின் பொது செயலாளர் பதவியை மைத்திரி பறித்தார் அல்லவா. அதைத்தான் சுட்டிக் காட்டினார் தயாசிறி.



# 5 லட்சம் வரி 25 லட்சம் லஞ்சம்

அரச எம்பிக்களின் கூட்டம் ஒன்று சில நாட்களுக்கு முன் இடம்பெற்றது அதில் வருமான வரி திணைக்களம் முறையாக வரி அறவிடாமை பற்றியும் அதற்குள் இடம்பெறும் லஞ்ச , ஊழல் பற்றியும் பேசினார்கள்.

அங்கு ஒரு எம்பி இப்படி ஒரு தகவலை கூறினார்,

ஒரு வர்த்தகர் ஒருவரை வருமான வரி திணைக்களத்துக்கு வருமாறு அழைப்பு வந்தது. அவர் பணக்கட்டு ஒன்றுடன் சென்றார்.

அவர் அந்த பணக்கட்டை அதிகாரியின் மேசைமீது எடுத்து வைத்தார்.அதை அதிகாரி எண்ணினார்.30 லட்சம் ரூபா இருந்தது.

அதில் 5 லட்சத்தை அந்த முதலாளியின் வரி எனக்கூறிவிட்டு மிகுதி 25 லட்சத்தை அந்த அதிகாரி எடுத்துக்கொண்டார்.

இப்படித்தான் அதற்குள் நடக்கிறது.இப்படி இருந்தால் எப்படி நாட்டின் வருமானத்தை அதிகரிப்பது என்று அந்த எம்பி கவலையுடன் கூறினார்.



# எம்பிக்கள் அடி தடி... ஜஸ்ட் மிஸ்...

அந்தக் கூட்டத்தில் அதிகமாக பேசப்பட்டது வட் வரி அதிகரிப்பு பற்றித்தான்.கலந்துகொண்ட எம்பிக்களில் அதிகமானவர்கள் அந்த வரியை எதிர்த்தனர்.

ஏற்கனவே மக்கள் பிரச்சினையில் இருக்கின்ற நிலையில்,வட் வரியை அதிகரித்திருப்பதானது மக்களை மீண்டும் சிக்கலுக்குள் தள்ளியுள்ளது. எங்களால் எப்படி ஊர்களுக்குச் செல்ல முடியும் என்று கூறினர்.

இந்த விவாதம் முற்றிப் போய் இரண்டு எம்பிக்கள் மோதிக்கொள்ளும் நிலை ஏற்பட்டது.அவர்கள் மஹிந்தானந்த அழுத்கமகே மற்றும் சிந்தக மாயாதுன்ன.

சிலர் சில நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப செயற்படுகிறார்கள் என்று மஹிந்தானந்த கூற அருகில் அமர்ந்திருந்த மாயாதுன்னவுக்கு கோபம் வந்துவிட்டது.

"""நிகழ்ச்சி நிரலை பற்றி நீங்க பேசாதீங்க.நீங்கதான் சில நிகழ்ச்சி நிரலுக்கு பின்னால போய் அரச கவிழ்த்தீங்க..""" என்றார்.மாயாதுன்ன .

இதனால் கோபமடைந்த மஹிந்தானந்த "" என்ன..என்ன சொல்றா "" என்று கூறிக்கொண்டு அடிப்பதற்காக கதிரையை விட்டு எழுந்தார்.

"" அடிக்க போறிங்களா.."" என்று கூறி மாயாதுன்னவும் எழுந்தார்.

இது பெரும் சண்டையில் முடியப்போகிறது என்பதை அறிந்த அருகில் இருந்த எம்பிக்கள் இருவரையும் சமாதானப்படுத்தி கதிரைகளில் அமர வைத்தனர்.



# நடிகர்-நடிகைகள் மொட்டுடன் இணைந்து தேர்தலில்..

எதிர்வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் அதிகமான நடிகர்-நடிகைகள் மொட்டு கட்சியில் இணைந்து போட்டியிடவுள்ளார்கள்.

இது தொடர்பான சந்திப்பு ஒன்று சில நாட்களுக்கு முன் மஹிந்த ராஜபக்சவுக்கும் நடிகர்-நடிகைகளுக்குமிடையில் மஹிந்தவின் விஜேராம இல்லத்தில் இடம்பெற்றது.

50 பேர் அதற்கு அழைக்கப்பட்டபோதிலும் 150 பேர் வந்திருந்தனர்.

அன்றைய தினம் நாமல் ராஜபக்ச வெளிநாட்டில் இருந்து நாட்டுக்கு வந்தார். வந்த உடனேயே நாமல் வீட்டுக்கு போகாமல் நேராக கூட்டம் நடக்கும் இடத்துக்கே சென்றார்.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பல நடிகர்,நடிகைகள் எதிர்வரும் தேர்தலில் போட்டியிடுவதற்கு இணக்கம் தெரிவித்தனர்.


2024
HAPPY NEW YEAR
மலர்ந்துள்ள ஆண்டு சிறப்புடன்
சௌபாக்கியம் பொங்க வாழ்த்துக்கள்


SSD
TRAVELS & TOURS
KDH VAN SERVICES
We Provide our Best Services
Wedding Cars,
Airport Drops & Pickups
All Island Travels and Tours
விமான நிலையம்
சுற்றுலாத்துறை (இலங்கை முழுவதும்)
திருமண வைபவங்கள்,
மாகாணங்களுக்கான பயணச்சேவை
முற்றிலும் குளிரூட்டப்பட்டது.
அனுபவம் வாய்ந்த சாரதிகள்
பயணிகளுக்கான காப்புறுதி
(இன்சூரன்ஸ்) செய்யப்பட்டுள்ளது
HIACE
TAXI.LK
+94760721400
SSD Travels & Tours
@travelstours7



தொடர் - 02

# சட்டவிரோதமான Spas: சீரழியும் யுவதிகள்

ஜ எம்.எல்.எஸ்.முஹம்மத்
lk.mlsmohamed@gmail.com

கொரோனா பாதிப்பைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கானவர்கள் தமது தொழிலையும் வருமானத்தையும் இழக்க ஆரம்பித்தனர். நூற்றுக்கணக்கான ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டதால் அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த பல குடும்பப் பெண்களும் யுவதிகளும் புதிய தொழிலையும் வருமானம் பெறும் மாற்று வழிகளை நோக்கி நகர நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இந்த அப்பாவிப் பெண்களின் பரிதவிப்புக்களை சாதமாகப் பயன்படுத்திக் கொள்ள ஆரம்பித்த வியாபார மாபியாக்கள் சட்டவிரோதமான பதிவு செய்யாத ஆரோக்கிய நிலையங்களை ஆரம்பித்து அப்பெண்களுக்கு வருமானம் தேடிக்கொடுக்க முயற்சித்தனர்.

இவ்வாறு ஆரோக்கிய நிலையங்களில் இணைந்து பெண்கள் நாளொன்றுக்கு ரூபா.5000 முதல் ரூபா 25000 வரை உழைக்கின்றனர் என பெண் சமூக செயற்பாட்டாளர் பிஸ்லியா பூட்டோ தெரிவிக்கிறார்.

சட்டவிரோமான செயற்பாடுகள்

தகவல் அறியும் சட்டத்தின் ஊடாக ஆயுர்வேத திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள முக்கிய தகவல்களுக்கிணங்க இரத்தினபுரி நகரில் 8 ஆரோக்கிய நிலையங்கள் மாத்திரமே அரசிடமிருந்து முறையான பதிவுச் சான்றிதழ்களை பெற்றுள்ளனர் எனவும் இதுவரை 25 பேர் மாத்திரமே உடற்சிகிச்சை தொடர்பில் இரத்தினபுரி மாவட்டத்தில் உரிய பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர் எனவும் அரசில் பதிவுசெய்யாத ஆரோக்கிய நிலையங்களை நடத்திச் செல்வதும், ஆரோக்கிய நிலையங்களுக்கான அறிவுறைகளை பின்பற்றத் தவறுவதும் தண்டனைக்குரிய குற்றங்கள் எனவும் தெரிவிக்கிறது.

இலங்கை சுற்றுலா அதிகார சபை மாத்திரமே ஆரோக்கிய நிலையங்களை பதிவுசெய்வதற்கான அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமாகும்.

இந்நிறுவனம் ஆரோக்கிய நிலையங்கள் ஆரம்பிக்கப்படுகின்ற போது கடைபிடிக்கப்பட வேண்டிய அறிவுறுத்தல்கள் மற்றும் சட்ட விதிமுறைகள் பற்றியும் அதன் உத்தியோகபூர்வ றறற.ளடவனய.பழஎ.டம என்ற இணைய தளத்தில் வெளியிட்டுள்ளது.

அத்துடன் 2005 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட 38 மற்றும் 48 (4) ஆம் இலக்க இலங்கை சுற்றுலா சட்டங்களின் ஆரோக்கிய நிலையங்கள் அனைத்தும் இலங்கை சுற்றுலா சபையின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதையும் , சுற்றுலா சபையின் அறிவுறுத்தல்களை பின்பற்றத் தவறும் அனைத்து ஆரோக்கிய நிலையங்களுக்கு எதிராக மேற்படி சட்டத்தின் 48 (10) மற்றும் 63 (2) உபபிரிவு சட்டங்களின் கீழ் கடுமையான தண்டனைகளுக்கு உட்படுத்தப் படுவார்கள் எனவும் தெளிவாக அறிவித்துள்ளது.

அதேபோன்று பதிவு செய்யப்பட்ட ஆரோக்கிய நிலையங்களை உடனுக்குடன் தெரிந்து கொள்வதற்கான வசதிகளையும் இலங்கை சுற்றுலா அதிகார சபையின் இணையதளம் ஒழுங்கு செய்து கொடுத்துள்ளது.

சமூக ஊடகங்களின் உதவியுடன்

இலங்கை ஆயுர்வேத திணைக்களம் மற்றும் இலங்கை சுற்றுலா அதிகார சபை உட்பட பிராந்திய பொலிஸ் நிலையங்கள் அனைத்தும் முறையாக பதிவுகளை மேற்கொள்ளாமல் சட்டவிரோதமாக இயங்கிவரும் ஆரோக்கிய நிலையங்களை கட்டுப்படுத்துவதற்கும், அதன் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு கடமைப்பட்டுள்ள போதிலும் ஒவ்வொரு மாவட்டங்களிலும் நூற்றுக்கணக்கான போலி ஆரோக்கிய நிலையங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன.

முகநூல்கள் (Facebooks), இணையதளங்கள் மற்றும் வட்சப் குழுமங்கள் உட்பட அனைத்து சமூக ஊடகங்களையும் பயன்படுத்தி சட்டவிரோதமான இஸ்பா நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கட்டணம் செலுத்துவது முதல் அனைத்து நடவடிக்களும் நிகழ்நிலையில் இடம் பெற்றதன் பின்னர் விடுதி அறைகளுக்கு அழைக்கப்படுவதாகவும், இவ்வாறான நிகழ்நிலை இஸ்பா நிலையங்களை கணனித் துறையில் கூடிய ஈடுபாடு கொண்ட இளைஞர் யுவதிகளே முன்னெடுத்து வருவதாக பல்கலைக்கழக மாணவர் ஒருவர் தெரிவிக்கிறார்.

இரத்தினபுரி மத்திய பஸ் நிலையத்தை அண்மித்துக் காணப்படும் களஞ்சியசாலை வீதியில் மாத்திரம் 15 இற்கும் மேற்பட்ட ஆரோக்கிய நிலையங்கள் உள்ளன.எனினும் அவற்றில் இரண்டு மாத்திரம்தான் பதிவு செய்யப்பட்ட நிலையங்களாகவுள்ளன.

அதேபோன்று இரத்தினபுரி நகரில் மாத்திரம் 35 இற்கும் மேற்பட்ட ஆரோக்கிய நிலையங்கள் உள்ளன. இவற்றில் 8 நிலையங்கள் மாத்திரம்தான் அரசின் பதிவுச் சான்றிதழ்களை பெற்றுக் கொண்டுள்ளன.

இலங்கை சுற்றுலா அதிகார சபை வெளியிட்டுள்ள ஆரோக்கிய நிலையங்களுக்கான வழிகாட்டல் கையேட்டில் பல விடயங்கள் நினைவுபடுத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக பதிவுச் சான்றதழ் மக்கள் பார்வைக்காக தொங்கவடப்பட வேண்டும் எனவும் ஆயுர் வேத வைத்தியர் ஒருவர் ஒவ்வொரு நிலையத்திலும் தொடர்ச்சியாக இருக்க வேண்டும் எனவும் அங்குள்ள பணியாளர்கள் அனைவரும் உடற்சிகிச்சை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகளை நிறைவுசெய்திருக்க வேண்டும் எனவும் அறைகள் தெளிவான காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் கொண்ட பாதுகாப்பான இடங்களாகவும்,வழங்கப்படும் சிகிச்சை முறைகள் பற்றி தெளிவாக காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனவும் எக்காரணம் கொண்டும் ஆண்களுக்கு பெண்களும் பெண்களுக்கு ஆண்களும் உடற்சிகிச்சைகள் வழங்கக் கூடாது எனவும் மேற்படி வழிகாட்டல் கையேட்டில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

-தொடரும்-





# Youth Tech Skills நிகழ்வுக்கு மக்கள் வங்கி ஆதரவு

இலங்கையிலுள்ள மிகவும் டிஜிட்டல்மயப்படுத்தப்பட்ட வங்கிகளுள் ஒன்றாகவும், டிஜிட்டல் நிதி முறைமையில் அனைவரையும் அரவணைப்பதில் முன்னோடியாகவும் திகழ்ந்து வருகின்ற மக்கள் வங்கி, டிஜிட்டல் பொருளாதாரம் என்ற கோணத்தில் இலங்கையை அடுத்த மட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்காக டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்களை இளைஞர், யுவதிகள் மத்தியில் வளர்த்து, அவர்களுக்கு வலுவூட்டுவதில் அதிகரித்து வரும் முக்கியத்துவத்தை இனங்கண்டுள்ளது.

வங்கித் துறையில் அதிநவீன தொழில்நுட்பத்தை உபயோகிப்பதில் முன்னோடி என்ற வகையில், தனது வர்த்தக சமூக பொறுப்புணர்வு அணுகுமுறையில் மூலோபாயம்மிக்க மாற்றமொன்றை மேற்கொண்டு, Sarvodaya Fusion உடன் இணைந்து 'Empowering Tomorrow's



Innovators: Youth Tech Skill Development Project'என்ற நிகழ்விற்கு வலுவூட்ட மக்கள் வங்கி பெருமையுடன் முன்வந்துள்ளது.

கொழும்பு 05 இலுள்ள மக்கள் வங்கி பணியாளர் பயிற்சிக் கல்லூரியில் இச்செயற்திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் நடைபெற்றதுடன், மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும்/பொது முகாமையாளருமான திரு. கிளைவ் பொன்சேகா மற்றும் Lanka Jathika Sarvodaya Shramadana Sangayama (சர்வோதய இயக்கம்) இன் தலைவரான கலாநிதி வின்ய ஆரியரத்ன ஆகியோர் இதில் கலந்து சிறப்பித்துள்ளனர்.

இச்செயற்திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதன் மூலமாக, வங்கியானது சமுதாய அபிவிருத்திக்கு பங்களிப்பது மட்டுமல்லாது, இலங்கையில் நேர்மறையான மாற்றம் மற்றும் புத்தாக்கத்திற்கான வழிகாட்டி என்ற தனது ஸ்தானத்தையும் அது நிலைநிறுத்தியுள்ளது.

# இரண்டாம் கட்டத்தை நிறைவு செய்துள்ள MAS



MAS Holdings நிறுவனம், கூரை மீது பொருத்தப்பட்ட Photovoltaic (PV) சூரிய சக்தி திட்டமான Project Photon இன் இரண்டாவது கட்டத்தை நிறைவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டம், MAS Holdings நிறுவனத்தை இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறையின் முன்னோடியாக மாற்றியுள்ளது.

இது இலங்கையின் மிகப்பெரிய கூரை மீது பொருத்தப்பட்ட சூரிய சக்தி உற்பத்தியாளராகவும், வழங்குநராகவும் ஆக்கியுள்ளது.

Project Photon க்கு முன்னர், MAS Holdings நிறுவனம் பல்வேறு இடங்களில் சிதறிக் கிடந்த 1.7 ஆறு சூரிய சக்தி திறனை மட்டுமே கொண்டிருந்தது. புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறுவதற்கான குழுமத்தின் உறுதிப்பாட்டின் கீழ், Project Photon தொடங்கப்பட்டது.

18 இடங்களில் 16 ஆறு சூரிய சக்தி சேர்க்கப்பட்டது. இப்போது, இரண்டாம் கட்டத்தின் நிறைவுடன், கூடுதலாக 6 ஆறு, ஆயுளு இன் மொத்த சூரிய உற்பத்தி திறனை 23.7 ஆறு ஆக அதிகரித்துள்ளது. சூரிய சக்தி உற்பத்திக்கான முந்தைய தேசிய சாதனையை முறியடித்து, MAS இலங்கையின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிலப்பரப்பை மாற்றி அமைக்கும் நிறுவனமாக தனது நிலையை உறுதிப்படுத்துகிறது.

# Linaவுக்கு ISO 9001:2015 சான்றிதழ்



Sunshine Holdings PLC இன் மருத்துவப் பிரிவான Lina Manufacturing Pvt., கடவத்தை உற்பத்தி ஆலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட தர முகாமைத்துவ அமைப்புக்கான (QMS) ISO 9001:2015ஃளுடுளு ஐளுழு 9001:2015 சான்றிதழைப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தர நிர்ணய நிறுவனத்தால் (SLSI) வழங்கப்பட்ட இந்த மதிப்பீடு, அதன் பல்வேறு தயாரிப்பு நோக்கங்களில் தர முகாமைத்துவத்தின் மிக உயர்ந்த தரத்தை நிலைநிறுத்துவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

ISO 9001:2015 சான்றிதழ் செயல்முறையானது, Dry powder inhalation, காப்ஸ்யூல்கள், சுவாசப் பொருட்கள், இருதய மருந்துகள், கிரீம்கள் மற்றும் Nasal Sprayகள் உட்பட Lina Manufacturing அனைத்து தயாரிப்பு நோக்கங்களையும் உள்ளடக்கியது.

ஆகஸ்ட் 1, 2023 முதல், புதிதாக இணைக்கப்பட்ட கிரீம்கள் மற்றும் Nasal Spray வகைகளும் இந்த சான்றிதழில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த விரிவாக்கமானது, அதன் தர முகாமைத்துவ செயல்முறைகளை உலகளாவிய தரநிலைகளுடன் சீரமைப்பதற்கும் அதன் செயல்பாடுகள் முழுவதும் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும் நிறுவனத்தின் உறுதிப்பாட்டை மீண்டும் தக்க வைத்துள்ளது.

# அமானா வங்கியின் தில்ஷாட் ஹமீட் மெர்தேகா கிண்ணம் 2023 இல் TT சம்பியன் அணியில்

வங்கியின் கட்டுகஸ்தோட்டை கிளையின் உதவி முகாமையாளராக கடமையாற்றும் தில்ஷாட் ஹமீட், வர்த்தக போட்டித் தொடர்களில் வங்கியின் சார்பில் பங்கேற்று, தமது திறமையை வெளிப்படுத்தி பல சம்பியன்ஷிப்களை வெற்றியீட்டியுள்ளார்.

இந்த சாதனை தொடர்பில் தில்ஷாட் ஹமீட் கருத்துத் தெரிவிக்கையில், "பெருமைக்குரிய மெர்தேகா கிண்ண 2023 டேபிள் டெனிஸ் போட்டித் தொடரில் இலங்கையையும், அமானா வங்கியையும் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றிருந்ததை மிகவும் பெருமையாக கருதுகின்றேன்.

இந்த வெற்றி எனக்கு மிகவும் முக்கியமானது, எமது தேசத்தின் வெற்றிகரமான செயற்பாட்டில் பங்கேற்றிருந்ததையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றேன். எனது இந்தப் பயணத்தில் அமானா வங்கியின் ஒப்பற்ற ஆதரவு மிகவும் முக்கியமானதாக



அமைந்திருந்ததுடன், எதிர்காலத்தில் இது போன்ற மேலும் பல சாதனைகளை எய்துவதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவேன்." என்றார்.





# Ocean Lankaவிற்கு தங்க விருது

இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபையினால் (NCE) ஏற்பாடு செய்யப்பட்ட, 31ஆவது வருடமாக இடம்பெறம் ஏற்றுமதி விருதுகள்-2023 இல், ஏற்றுமதியாளர்களுக்கான விநியோகஸ்தர்கள் (Suppliers to Exporters Sector) பிரிவின் "Extra Large" எனும் பிரிவில், இலங்கையின் மிகப் பெரிய நெசவுத் துணி உற்பத்தியாளரான Ocean Lanka (Pvt) Ltd நிறுவனம் தங்க விருதைப் பெற்றுள்ளது.

இந்த விருதானது, நிறுவனத்தின் சிறப்பான அர்ப்பணிப்பு மற்றும் பங்களிப்புகளை அங்கீகரிப்பதோடு, நெசவுத் துணி உற்பத்தியில் சிறந்து விளங்குதல், குழுப்பணி மற்றும் புத்தாக்கத்தில் அதன் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

ஏற்றுமதித் துறையில் சிறந்த செயற்பாடுகளை அங்கீகரிக்கும், இலங்கை வர்த்தகத்துறை நாட்காட்டியின் முதன்மையான நிகழ்வான NCE ஏற்றுமதி விருதுகள் (NCE Export Awards), அதன் 31ஆவது பதிப்பைக் கொண்டாடியது.

இந்த விருதுகள், மேம்பட்ட உலகளாவிய பார்வையை ஏற்படுத்தும் நுழைவாயிலை அமைக்கவும், இலங்கை அரசாங்கத்தின் பொருளாதாரக் கருத்துக்களுடன் இணங்கி, வணிகத்தின் வெற்றியின் முக்கிய தூண்களான மக்கள், இலாபம், பூகோளம் ஆகியவற்றையும் வலியுறுத்துகின்றன.



# பாடசாலைகளுக்கு மின்சார வசதி

*மக்கள் வங்கியின் "Mahajana Mehevara' வர்த்தக சமூக நலன்புரித் திட்டம் மற்றும் மனுசத் தெரண ஆகியன இணைந்து முன்னெடுத்த சூரிய சக்தி கட்டமைப்புகளின் மூலம் பின்தங்கிய பாடசாலைகளுக்கு மின்சாரம் வழங்கும் தொடர் வேலைத்திட்டங்களின் கீழ் ஏழு பாடசாலைகளுக்கு மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*கல்வி மற்றும் நிலைபேற்றியலை ஒருங்கிணைக்கும் புதியதொரு எண்ணக்கருவுடனான இந்த திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சூரிய சக்தி மின்னுற்பத்தி பலகங்கள் மூலம் கல்லூரிகளுக்கு மின்சார வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*இதன் கீழ் மீமுரே கலமுதுன கனிஷ்ட பாடசாலை, மீகஹகிவுல் களுகலே கனிஷ்ட பாடசாலை, இரத்தினபுரி அயகம, தும்பறை எல்லாகவ, தும்பறை இல. 2 தமிழ்ப் பாடசாலை் கெப்பிதிகொல்லாவ, எல்லாவவ முஸ்லிம் பாடசாலை் பம்பரே, சோலபுர ஆரம்ப பாடசாலை் மன்னார் கௌரியம்மன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் காலி, பிட்டதெனிய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே இவ்வாறு மின்சார வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.*

# Hemas இற்கு விருதுகள்



தமது புத்தாக்கமான டிஜிட்டல் சந்தைப்படுத்தல் உத்திகளுக்கு ஒரு சிறந்த சான்றாக, மதிப்புமிக்க ளுடுஐஆ னுபைளை 2.3 விருதுகளில் குநஅள மற்றும் ஊடழபயசன குசநளா ஆகியன, முறையே மெரிட் விருது மற்றும் டிஜிட்டல் வெண்கல விருதுகளைப் பெற்றுள்ளன.

மாதவிடாய் சுகாதாரத்தை வலியுறுத்தும் குநஅள இன், "மகள்கள் தினம்" எனும் அதன் சிறந்த டிஜிட்டல் பிரசாரத்திற்காக, ளுடுஐஆ னுபைளை இனால் ஆநசவை விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மகள்கள் தின கொண்டாட்டத்துடன் இணைந்தவாறு 2022 ஒக்டோபரில் இந்த பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இதயத்தைத் தூண்டும் இந்த பிரசாரமானது, தந்தைக்கும் மகள்களுக்கும் இடையிலான இறுக்கமான உறவை திறமையாக காண்பித்ததன் மூலம், மாதவிடாய் ஆரோக்கியம் தொடர்பில் சமூகத்தில் காணப்படும் களங்கத்தை நீக்கும் வகையில் அமைந்திருந்தது.

இந்த பிரசாரமானது, ஒரு சக்தி வாய்ந்த செய்தியை சமூகத்திற்கு வழங்கியதோடு, பெண்களின் வாழ்க்கையில் ஆண்களின் முக்கிய பங்கை வலியுறுத்தியது. அத்துடன் மாதவிடாய் பற்றிய உரையாடல்களில் வெட்கப்பட வேண்டாம் என்பதை அவர்களிடையே ஊக்குவிக்கிறது.

# ஜூனியர் ஓபன் கோல்ஃப் சாம்பியன்ஷிப் 2023




இரண்டு நம்பிக்கைக்குரிய ஜூனியர் கோல்ப் வீரர்கள், ஜெவான் சதாசிவம் மற்றும் கயா தலுவாத்தே ஆகியோர் தங்கப் பிரிவு ஆண் மற்றும் பெண் பிரிவுகளில் முறையே இலங்கை ஜூனியர் ஓபன் கோல்ஃப் சாம்பியன்ஷிப் 2023 இல் முதல் பரிசுகளைப் பெற்றனர்,

இது ரோயல் கொழும்பு கோல்ஃப் கிளப்பில் (ஆர்.சி.ஜி.சி) சமீபத்தில் ஓர் வண்ணமயமான பரிசளிப்பு விழாவை நடாத்தியது.

இந்நிகழ்ச்சியை இலங்கை கோல்ஃப் ஏற்பாடு செய்தது மற்றும் 15 வது ஆண்டு சாதனை படைக்க ப்ரிமா சன்ரைஸ் அனுசரணை வழங்கியது.

100 இற்கும் மேற்பட்ட ஜூனியர் கோல்ப் வீரர்கள் இந்தியாவிலிருந்து பல கோல்ப் வீரர்களுடன் போட்டியிட்டனர், அவர்களிடையே அனைத்து பிரிவுகளிலும் மிகச் சிறந்த போட்டியைக் கண்டனர்.

# இயற்கை சாயமிடும் பாரம்பரியம்



இலங்கையின் ஜவுளித் துறையில், இயற்கை சாயமிடுவதில் நீண்டகால வேரூன்றிய பாரம்பரியம் பல நூற்றாண்டுகளாக பரவி, நாட்டின் வளமான ஜவுளி பாரம்பரியத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது.

நாட்டின் அபரிமிதமான பல்லுயிர் பலவகையான தாவரவியல் வளங்களை வழங்கியுள்ளது. இது ஆடைத் தொழிலுக்கு அத்தியாவசியமான இயற்கை நிறமிகளை வழங்குகிறது.

மஞ்சள், இண்டிகோ மற்றும் ஆயனனநச சழழவ ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட தெளிவான நிழல்கள் முதல் உயவநஉாரவிலிருந்து பெறப்பட்ட மஞ்சள் வரை, இயற்கை சாயங்களில் இலங்கையின் பாரம்பரியம் அதன் ஜவுளி ஏற்றுமதியில் ஒரு முக்கிய அங்கமாக உள்ளது.

Hayleys Fabric PLC, Noyon Private Limited, Dynawash மற்றும் Ocean Lanka போன்ற இலங்கை ஆடைத் தொழிலில் முக்கிய தொழில் நிறுவனங்கள் இந்த செயற்பாட்டை வழிநடத்துகின்றன, சர்வதேச சந்தைகளுக்கு இயற்கைச் சாயங்களைப் பயன்படுத்தி சுற்றுச்சூழலுக்குப் பொறுப்பான தயாரிப்புகளுக்கு அதிக முன்னுரிமை அளித்து வருகின்றன.

Hayleys Fabric நிறுவனத்தின் 'Warna by Mahogany" புதுமை: இயற்கை சாயத்தின் புரட்சி Hayleys Fabric, சூழலுக்கு உகந்த பேஷனில் முன்னோடியாக உள்ளது.

# HNBஇற்கு ஐந்து விருதுகள்



HNB PLC, 2023 ஆம் ஆண்டுக்கான SLIM National Sales Awards (NSA) நிகழ்வில் அதன் அர்ப்பணிப்புள்ள ஊழியர்கள் மொத்தம் ஐந்து விருதுகளைப் பெற்றுள்ளனர்.

HNB கிண்ணியா கிளையைச் சேர்ந்த அகீல் அஹமட் வங்கித் துறையில் தனித்து நின்று, "விற்பனை நிறைவேற்று அதிகாரி" பிரிவில் தங்க விருதை வென்றார். SOLO யூனிட்டைச் சேர்ந்த தசுன் உத்துருவெல்ல தனது சிறப்பான திறமைகளை வெளிப்படுத்தி, வங்கித் துறையில் "விற்பனை மேற்பார்வையாளர்" பிரிவில் தங்க விருதைப் பெற்றார்.

வர்த்தக அபிவிருத்தி பிரிவின் வலையமைப்பு விற்பனைப் பிரிவைச் சேர்ந்த ஹர்ஷன முனசிங்க ""விற்பனை முன்னணி" பிரிவில் தங்க விருதைப் பெற்றுள்ளார்.HNB யாழ்ப்பாண மெட்ரோ கிளையைச் சேர்ந்த அரிச்சந்திரன் யோகதாஸ், "விற்பனை நிறைவேற்று அதிகாரி" பிரிவில் வெண்கல விருதைப் பெற்றுள்ளார்.

வணிக அபிவிருத்தி பிரிவின் வலையமைப்பு விற்பனைப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்திய ஷானக்க சமரசிங்க வெண்கல விருதைப் பெற்றார்.



2024
HAPPY NEW YEAR
மலர்ந்துள்ள ஆண்டு சிறப்புடன்
சௌபாக்கியம் பொங்க வாழ்த்துக்கள்




ஹரே கிருஷ்ணா
ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்
ISKCON
சர்வதேச கிருஷ்ண பக்தி கழகம்
ஸ்தாபக ஆச்சரியர் அருட்திரு அ.ச. பக்தி வேதாந்த சுவாமி ஸ்ரீல பிரபுபாதா
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
புது ஆலயத்திற்கான வர்ணபூச்சு வேலைகளும் மற்றும் முடிவு வேலைகளும் நடைபெற்று கொண்டிருக்கின்றன
ராதா கிருஷ்ணா
சீதா ராம்
ஸ்ரீ பாலாஜி
நரசிம்மர்
உயரமான கோபுரம் தசவதார மூர்த்திகள், பளிங்கு தரைகள் மற்றும் கண்கவர் வேலைபாடுகள்.
வர்ணபூச்சுக்கான மதிப்பீடு
ரூபா.5,000,000/= (5 மில்லியன்)
அன்பான பக்தர்களே நீங்களும்
இச்சேவையில் பங்கு பற்றி
விரைவில் கும்பாபிஷேகம் செய்து
பகவானின் அருளை பெறுவோமாக.
Bank Detials
Commercial Bank
Bank Branch - Kotahena Branch
Account Name - ISKCON -TEMPLE FUND
Account No. - 1120017042
Swift Code - CCEYLKLX
Hatton National Bank
Bank Branch - Jempettah Street
Account Name - ISKCON
Account No. - 207010000891
Swift Code - HBLILKLX
188, புதுச்செட்டித் தெரு, கொழும்பு – 13.
+94 772288166 +94 112433325
E-mail: info@iskonsrilanka.org Web: www.iskon.lk




சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
THE SASIKA DRIVING SCHOOL
Regd. No: DS882
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம்
இல. 57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்
021 221 7678
077 949 5706
077 320 883
email: sasikadrivingschool@gmail.com
Web: sasikalearners.com
L
LEARNER DRIVER
கிளை நிறுவனங்கள்
மல்லாகம் 021 224 3393 077 343 6622
பண்டத்தரிப்பு 021 225 2333 077 434 3798
கச்சேரி நல்லூர் வீதி (யாழ்ப்பாணம்) 021 221 7578, 077 434 3149, 077 990 5414
புன்னாலைக்கட்டுவன் 021 224 5001 076 384 0684
வேலணை - 021 221 5472 / 070 368 9319
யாழ் மத்தி: 021 222 8004 / 077 998 6247 074 254 2264
உரிமையாளரின் தொடர்புகளுக்கு: 0777 226 247 / 077 614 0361


SpiceJet
SpiceJet
Red. Hot. Spicy.
VANAKKAM
சென்னை
இரு வழி கட்டணம் (RT FARE)
LKR 45,500
ஒரு வழி கட்டணம் (OW FARE)
LKR 36,400
கொழும்பில் இருந்து சென்னை
நேரடி விமானங்கள்
29 நவம்பர் 2023
முதல் தொடங்குகிறது
FREE
30KG+7KG
BAGGAGE ALLOWANCE
Jetwing
AIR
தகவல்களுக்கு தொடர்பு கொள்ளவும்
JETWING HOUSE II - LEVEL 1,
46/21 NAVAM MAWATHA COLOMBO 02
PHONE: +94 11 473 2400
RUKSHAN
+94 77 790 2118
rukshanm@jetwing.lk
SHAFWAN
+94 74 352 9047
shafwan@jetwing.lk




# சவூதி அரேபிய தூதுவரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி



புத்தாண்டை முன்னிட்டு உங்கள் அனைவருக்கும் எங்கள் அன்பான இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, எதிர்காலம் சிறந்ததாக அமைய வேண்டும் என்பதையும், வரவிருக்கும் ஆண்டானது கடந்த ஆண்டுகளை விடவும் செழிப்பானதாக அமைய வேண்டும் எனவும் வாழ்த்துகிறோம். 2024 புத்தாண்டின் வருகையானது அமைதி, நல்லிணக்கம் மற்றும் செழுமைக்கான எதிர்பார்ப்பு மற்றும் அபிலாஷைகளை எமக்கு அளிக்கிறது. இந்த சந்தர்ப்பத்தில், இலங்கை மக்களுக்கு எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு அனைவரது வாழ்விலும் மகிழ்ச்சி, புதிய இலக்குகள், அடைவுகள், மற்றும் புதிய உத்வேகங்களையும் கொண்டு வரட்டும். இரு நட்பு நாடுகளின் மக்களுக்கும் முன்னேற்றம், செழிப்பு மற்றும் மகிழ்ச்சியுடன் கூடிய ஒரு ஆண்டாக வருகின்ற ஆண்டு அமைய வாழ்த்துகிறேன்.

இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர்
காலித் ஹமூத் அல்கஹ்தானி

# எல்லா வகையான மாற்றங்களையும் தரும் ஆண்டாக 2024 அமையட்டும்

## உதயா எம்பி வாழ்த்து



நாட்டு மக்களின் கஷ்டங்கள் நீங்கி அனைத்து வகையான மாற்றங்களையும் 2024 புது வருடம் கொண்டு வர வேண்டும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்தார்.

2024 வருட பிறப்பை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தின் போதும் அதனை அடுத்து நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாலும், அரசியல் குழப்பகர சூழ்நிலையாலும் மக்கள் பெரும் இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரித்து, வருமானம் குறைந்து, வேலைவாய்ப்பு இழந்து மக்கள் வறுமையால் வாடுகின்றனர். இந்நிலையில் அவர்கள் மீது புதிய வரிகளும் வலிகளும் சுமத்தப்படுகிறது.

இவ்வாறான பல சவால்களுக்கு மத்தியில் 2024ஆம் வருடம் இலங்கை மக்களுக்கு முக்கிய திருப்புமுனைகளை ஏற்படுத்தக் கூடிய தேர்தல் வருடமாகவும் அமைகிறது.

எனவே இதுவரை காலமும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு முடிவுகட்டி எல்லா வகையான புதிய மாற்றங்களும் ஏற்படுத்தும் சிறப்பு ஆண்டாக 2024 அமைய வேண்டும் என இறைவனை பிரார்த்திப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.







JRIDE
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவானதாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358